கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுக.

## கூட்டி மருந்தூசிகள்

இப்போது பெரியவர்கள், குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கும் கிடைக்கிறது



### கோவிட்-19 தடுப்பூசிகள் பலனுள்ளவை

கோவிட்-19 தடுப்பூசிகள் கடுமையான நோய், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல் மற்றும் இறப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கின்றன. நீங்கள் தகுதி பெறும்போது பூஸ்டர் டோஸைப் போட்டுக்கொள்வது உட்பட கோவிட்-19 -இன் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்ளுங்கள், இதனால் உங்களுக்கு அதிக பாதுகாப்பு கிடைக்கும்.

### கூட்டிகள் பாதுகாப்பானவை

கோவிட்-19 கூட்டிகள் பல நூறு மில்லியன் பேருக்குப் பாதுகாப்பானவையென எண்பிக்கப்பட்டுள்ள மூலத் தடுப்பூசிகளைப் போல் அதே ஆக்கக்கூறுகளைக் கொண்டவை. மிதமான பக்க விளைவுகள் சாதாரணமானவை. கடுமையான பக்க விளைவுகள் மிக அரிதானவை.





### கூட்டிகள் உம்மைப் பாதுகாப்பாக இருக்க உதவுகின்றன

பூஸ்டர்கள் என்பது நீங்கள் முழுமையாக தடுப்பூசி போட்ட பிறகு நீங்கள் பெறும் ஊசிகள், இதன் மூலம் நீங்கள் கோவிட்-19 இல் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.



கூட்டிகள் பல தடுப்பூசிகளுக்குப் பொதுவானவை. உதாரணமாக,ஏற்புவலித் தடுப்பூசிகள் பெரியவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேவைப்படுகின்றன.

சில தடுப்பூசிகளினாலான ஒருவரின் பாதுகாப்பு காலப் போக்கில் குறைவடைவதாகவும் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு கூட்டி உதவுவதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். கோவிட்-19 பூஸ்டர்களும் அதே வழியில் செயல்படுகின்றன.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

23 Mar 2023

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus

## யார் ஒரு கூட்டியைப் பெறலாம்

கூட்டிகள் ஒவ்வொருவருக்கும் மேலதிகப் பாதுகாப்பை வழங்குகின்றன, ஆனால் சுகாதார நிலைமைகள், தொழில்கள், அல்லது வாழ்க்கை நிலைமைகளுள்ள ஆட்களுக்கு, அஃதாவது கோவிட்-19 தொற்றும் அல்லது கடுமையாகச் சுகவீனமுறும் உயர் இடர்ப்பாடுள்ளோருக்கு அவை விசேடமாக முக்கியமானவை.

உமது குடிவரவு நிலை அல்லது உம்மிடம் சுகாதாரக் காப்புறுதி அல்லது ஒரு அடையாள அட்டை இருக்கிறதா என்பது யாதாக இருப்பினும், கூட்டிகள் யாவருக்கும் இலவசம்.



## இன்னும் பாதுகாப்பைப் பெறுக

உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் சமூகத்தையும் மாறுபட்ட தொற்றுகளிலிருந்து பாதுகாப்பதற்கான சிறந்த வழி, கோவிட்-19 -இன் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்வதுதான். நீங்கள் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்வது என்பது தடுப்பூசியின் இரண்டு டோஸ்களைப் பெறுவதும் மற்றும் தகுதி பெறும்போது பூஸ்டர் டோஸ்களைப் பெறுவதும் ஆகும்.

யாவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு முகமூடியை அணிவதையும் சமூக இடைவெளியைப் பழகுவதையும் நீர் நோயுற்றுள்ள போது வீட்டிலிருப்பதையும் தொடர்க.

# உம்மைப் பாதுகாத்துக் கொள்க. உமது சமூகத்தைக் காத்துக் கொள்க. தடுப்பூசி பெறுக.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus